**செய்தி வெளியீடு எண்: 456** **நாள்:16.07.2021**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் அவர்களை மாண்புமிகு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர் புதுடெல்லியில் நேரில் சந்தித்து அனைத்துக் கட்சித் தீர்மானங்கள் மற்றும் கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

## மேகாதாதுவில் கர்நாடாக அணைக்கட்ட அனுமதி வழங்கக்கூடாது என அனைத்துக் கட்சிக் குழுவினர் ஒன்றிய ஜல்சக்தித் துறை அமைச்சரிடம் வலியுறுத்தினர்.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணைகட்டும் முயற்சியை தடுப்பதற்காகத் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்துச் சட்டமன்றக் கட்சியினருடன் ஆலோசனைக் கூட்டம் கடந்த 12.07.2021 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானங்களை அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் புதுடெல்லி சென்று அங்கு ஒன்றிய ஜல்சக்தித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து நேரில் வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி இன்று மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழக அரசின் சிறப்பு டெல்லி பிரதிநிதி திரு. ஏ.கே.எஸ்.விஜயன், திமுக சார்பில் திரு.ஆர்.எஸ்.பாரதி, எம்.பி, அஇஅதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் திரு.ஏ.கோபன்னா, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு.ஜி.கே.மணி, எம்.எல்.ஏ, மதிமுக சார்பில் திரு.வை.கோ. எம்.பி, விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் திரு.தொல்.திருமாவளவன்,எம்.பி., பாரதிய ஜனதா கட்சி சார்பில் திரு.ஆர்.சி.பால்கனகராஜ், இந்திக கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு.என்.பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் திரு.கே.பாலகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சி சார்பில் திரு.எம்.எச்.ஜவகருல்லா

எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் திரு.டி.வேல்முருகன், எம்.எல்.ஏ, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் திரு.ஏ.கே.பி.சின்னராஜ் எம்பி, புரட்சி பாரதம் சார்பில் திரு.எம்.ஜெகன்மூர்த்தி, எம்.எல்.ஏ, பொதுப்பணித்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.சந்தீப்சக்சேனா, இ.ஆ.ப., தமிழ்நாடு இல்லம் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் உள்ளுறை ஆணையர் திரு. ஜக்மோகன்சிங் ராஜீ, இ.ஆ.ப., உள்ளுரை ஆணையாளர் திரு.ஆஷிஷ் சட்டர்ஜி, இ.ஆ.ப., காவிரி தொழில்நுட்பக்குழுத் தலைவர் திரு.ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் கொண்ட குழு இன்று மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் அவர்களை நேரில் சந்தித்து அனைத்துக் கட்சித் தீர்மானங்களையும் கோரிக்கை மனுக்களையும் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் செய்தியாளர்களிடம் பேசும்போது குறிப்பிட்டதாவது–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துச் சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தி அனைவரும் டெல்லிக்கு சென்று மாண்புமிகு ஒன்றிய ஜல்சக்தித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து கர்நாடக மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்பதை வற்புறுத்துமாறு தெரிவித்தார்கள். அதன்படி, அனைத்துக்கட்சியினரும் இன்று வருகை தந்து மாண்புமிகு ஜல்சக்தித்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து கர்நாடக மேகதாதுவில் அணை கட்டக் கூடாது என்பதை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் கோரிக்கை மனுக்களையும் வழங்கினோம். 45 நிமிட சந்திப்பின்போது தமிழ்நாட்டின் கோரிக்கைகள் எடுத்துவைத்து உரையாடினோம். நாங்கள் வந்த நோக்கத்தைத் தெளிவாக எடுத்துரைத்தோம். கர்நாடக மேகதாதுவில் அணை கட்ட ஒன்றிய அரசு எந்த வகையிலும் துணை போகக் கூடாது என்பதுதான்.

மாண்புமிகு ஜல்சக்திதுறை அமைச்சர் விரிவாகத் திட்ட அறிக்கை தயாரிக்க ஒன்றிய நீர்வளத்துறை அனுமதி கொடுத்ததையும் சுட்டிக் காண்பித்தோம். எந்த வகையிலும் கர்நாடக அணைக் கட்ட முடியாது. காரணம், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கூறிய விதி முறைகள் ஒன்றைக்கூட அவர்கள் பூர்த்தி செய்யவில்லை. தமிழ்நாடு, கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் ஒப்புதல்களைப் பெற்று வரவேண்டும் எனவும் காவேரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர்வளக் குழுமம் ஆகியவற்றின் ஒப்புதல்களையும் பெற்றால்தான் விரிவான திட்ட அறிக்கையைச் செயல்படுத்த அனுமதிப்போம் என ஒன்றிய ஜல்சக்தித்துறை அமைச்சர் தெரிவித்தார். மேலும், அவர் எந்த விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் கர்நாடக அரசு பின்பற்றவில்லை. அவர்களாகவே ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அனுமதி வழங்க கோரியுள்ளார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மாண்புமிகு ஜல்சக்தி துறை அமைச்சர் தெரிவித்தார். ஆகவே, நாங்கள் வந்த நோக்கம் வெற்றி என்றே கூறலாம். நீங்கள் கர்நாடக மாநிலத்திற்கு அனுமதி கொடுப்பதாகக் கூறியதாகத் தகவல் வந்துள்ளதே எனக் கேட்டதற்கு நான் எந்த வாக்குறுதியையும் யார்க்கும் வழங்கவில்லை. விதிமுறைகளைப் பூர்த்திசெய்யாததால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க முடியாது என்றும் அதன் தொடர்ச்சியாக அணையையும் கட்ட முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறினார். மேலும், காவேரி நடுவர் மன்றத்திற்கு முழுநேரத் தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினோம். இரு முறை விளம்பரப்படுத்தியும் பொருத்தமான நபர்கள் முன்வரவில்லை இப்பிரச்சனை சம்பந்தப்பட்ட மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் உள்ள நடுநிலையாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். சில விதிமுறைகளை தளர்த்தி மீண்டும் விளம்பரப்படுத்தியுள்ளோம். அதில், சரியான நபர்கள் வரும்பொழுது தேர்வு செய்து நிச்சயம் நியமிக்கப்படுவார்கள். இவ்வாறு தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**